OS: 685/2018

Date: 16.10.2024

பெயர் :மனோகரன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை :</u>-** வாதி தரப்பில்

நான் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றதென்றால் 01.12.1995 தேதியில் திருமணம் நடைபெற்றது. எனது திருமணம் எனது விருப்பப்பட்ட திருமணமா பெரியோர்களால் நிச்சயக்கப்பட்ட திருமணமா என்றால் நான் விருப்பப்பட்டு செய்துகொண்ட திருமணம் அகும். நானும் எனது மனைவியும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு முன்பு 1995 ம் ஆண்டுக்கு முன்பு கந்தசாமியின் குடும்பத்தில் என்ன நடைபெற்றது என்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவியின் மூலமாக எனக்கு ஒரு சில விசயங்கள் தெரியும். எனக்கு திருமணம் ஆகும்போது எனது மனைவிக்கு என்ன வயதிருக்கும் என்றால் 25 வயது. எனது மனைவியுடன் உடன்பிறந்த சகோதரர்கள், சகோதரிகள் யார் யார் என்றால் சகோதரர் 2 ம் பிரதிவாதி, சகோதரிகள் வாதி வசந்தி, எனது மனைவி ஆவார்கள். எனக்கு திருமணம் ஆகும்போது வாதி ராஜம்மாளுக்கு 45 வயதிருக்கும் என்றால் சரிதான். வசந்திக்கு என்ன வயதிருக்கும் என்றால் எனது மனைவியை விட நான்கு வயது மூத்தவர் சுமார் 29 வயதிருக்கும். எனது மனைவியின் சகோதரர் முத்து மாணிக்கத்திற்கு எவ்வளவு வயதிருக்கும் என்றால் சுமார் 27 வயதிருக்கும்.

எனக்கு திருமணம் ஆகும்போது வழக்கு சொத்துக்களை அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்து பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகும்போது வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பயன்படுத்தி வந்தார்கள் என்றும், அந்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மனைவியின் தந்தையின் தாயார் பெருமாயிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்கள் பெருமாயிக்கு பாத்தியப்பட்டதென எனது பதிலுரையிலோ எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பெருமாயிக்கு

சொத்துக்கள் எப்படி பாத்தியப்பட்டதென்றால் கிரயப்படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி பெருமாயி உடன் சேர்த்து பழனியம்மாள் என்பவரும் சேர்ந்து கூட்டு கிரயம் பெற்றுள்ளார்கள். என்ன விஷ்தீரணம் என்றால் சர்வே எண்.51/2 ல், 5 ஏக்கர் 10 செண்ட் நிலம் மற்றும் கிணறு உட்பட ஆகும். 5 ஏக்கர் 10 செண்ட் நிலம் தான் இந்த வழக்கு சொத்துக்கள் என்றால் சரிதான். பெருமாயி எந்த ஆண்டு இறந்தார் என்று தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது சுமார் 1980 ம் ஆண்டு வாக்கில் இறந்தார். மேற்படி பெருமாயி இறந்த விவரங்கள் எனது மனைவி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பழனியம்மாளுக்கும், பெருமாயிக்கும் மட்டும் பாத்தியப்பட்ட 5 ஏக்கர் 10 செண்ட் நிலத்தினை எந்த ஆண்டு பெருமாயிக்கு மட்டும் கொடுக்கப்பட்டதென்றால் 1945 ம் ஆண்டு வாக்கில் கொடுக்கப்பட்டது. அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பழனியம்மாளுக்கும், பெருமாயிக்கும் யார் இந்த சொத்தினை கொடுத்தார்கள் என்றால் ஒரு லட்சுமண கவுண்டர் என்பவர் கொடுத்தார்.

லட்சுமண கவுண்டருக்கும், பெருமாயி அம்மாளுக்கும், பழனியம்மாளுக்கும் என்ன சம்மந்தம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் கிரயம் பெற்றுள்ளார். 5 ஏக்கர் 10 செண்ட் நிலம் லட்சுமண கவுண்டரும் அவரது பெண் வாரிசுதாரர்களும் அவருடைய பெண்வாரிசுதாரர்கள் பழனியம்மாள், பெருமாயி இருவருடைய குடும்பத்தினரும் சேர்ந்து குதவை ரூ.300 க்கு 1938 ம் ஆண்டு கிராம நிர்வாக அலுவலர் சின்னப்ப கவுண்டரிடம் ஆவண எண்.2095/1938 ஆக குதவை வைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பின்னிட்டு பெருமாயி அம்மாளும், பழனியம்மாளும் சேர்ந்து ரூ.300 குதவை பணத்தை திரும்ப அடைத்துவிட்டு அவரது தந்தை லட்சுமண கவுண்டரால் மேற்படி பெருமாயிக்கும், பழனியம்மாளுக்கும் 1938 ம் ஆண்டு ஆவண எண்.321/1938 என்பதை கிரயம் செய்துகொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்து விலைக்கு வாங்கப்பட்டது. பழயிம்மாளும், பெருமாயியும் ஒரே குடும்பத்தில் சகோதரர்களை திருமணம் செய்துகொண்டதால் சொத்து பரிமாற்றம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். எனது மனைவி சம்பூரணத்திற்கு அவரது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் கொடுக்கும் வரை அந்த சொத்து கூட்டு குடும்ப சொத்தாக இருந்தது என்றால் சரியல்ல, அது எனது மனைவியின் தந்தையான கந்தசாமிக்கு தனிப்பட்ட சொத்தாகும். கந்தசாமிக்கு பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தா, பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்தா என்றால் கந்தசாமியின் தாயார்

பெருமாயி 1980 ல் இறந்த பின்னிட்டு கந்தசாமிக்கு 05.03.1984 ல் தனிப்பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும். கந்தசாமிக்கு தனிப்பட்டா வழங்கும்போது 3 மகள்களும், 1 மகனும் இருந்தார்கள் என்றால் சரிதான். 1984 ம் ஆண்டு தனிப்பட்டா கந்தசாமிக்கு வழங்கப்படும் போது வாதி 21 வயது அடைந்தவர் என்றால் இருக்கலாம். கந்தசாமி அவரது தாயார் இறந்தபின்னிட்டு பட்டா வாங்கும்போது வாதி முழு வயதுடையவர் (மேஜர்) என்றால் இருக்கலாம். கந்தசாமிக்கு அவரது தாயார் இறந்த பிறகு தான் பட்டா மாறுதல் செய்யப்பட்டதென்றால் சரிதான்.

மேற்படி பெருமாயி பெயரில் உள்ள சொத்துக்கள் அவர் இறந்த பின்னிட்டு அவரது மகனான கந்தசாமிக்கு மட்டுமே தனித்துபாத்தியம் இல்லை என்றும், கந்தசாமிக்கு பிறந்த 3 மகள்கள் 1 மகனுக்கும் சொத்தில் பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்பதால் கந்தசாமியின் அனைத்து வாரிசுகளுக்கும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, கந்தசாமியின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். கந்தசாமி உயிருடன் இருந்தபோதே அவருக்கு செட்டில்மெண்ட் மூலமோ அல்லது கிரய வகையிலோ பாத்தியப்படாத நிலையில் சொத்துக்கள் கந்தசாமியின் தாயார் பெருமாயிக்கு பாத்தியப்பட்டுள்தால் கந்தசாமியின் வாரிசுகள் அனைவருக்கும் சொத்தில் உரிமை ஏற்பட்டு கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனது மனைவியின் தகப்பனார் கந்தசாமி எனது மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் கொடுக்கும்போது மேற்படி பத்திரத்தில் பிதுராஜ்ஜிய வகையிலோ அல்லது வேறு ஆவணங்கள் வகையிலோ பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பட்டாபடியும், அனுபவப்படியும் பாத்தியப்பட்டதென்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அனுபவம் என்பது வேறு, கிரய பத்திரம் என்பது வேறு என்று சொன்னால் ஒரு கிரய ஆவணம் இருந்தால் தான் சொத்தினை அனுபவிக்க முடியும், பட்டா படியும் அனுபவிக்கலாம். மேற்படி எனது மனைவிக்கு அவரது தந்தை தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியபோது அதில் பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என குறிப்பிட்டு எழுதப்பட்டால் கந்தசாமியின் அனைத்து வாரிசுகளுக்கும் சொத்துக்கள் சென்றடைந்துவிடும் என்பதால் தெரிந்தே மேற்படி வாசகங்களை தவிர்த்துவிட்டு பட்டா படியும், அனுபவப்படியும் பாத்தியம் என செட்டில்மெண்ட் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தை நான் தயார்செய்யவில்லை, நான் பத்திரம் பதிவு செய்யும்போது நான் செல்லவும் இல்லை. எனது ஆலோசனையின் பேரில்தான்

எனது மனைவிக்கு அரவது  தந்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. கந்தசாமி எப்போது இறந்தார் என்றால்  23.08.2007 ம் ஆண்டு இறந்தார். அவரது இறப்பு சான்றிதழ் எனது மனைவி வாங்கியுள்ளாரா என்றால் வாங்கவில்லை. மற்றவர்கள் யாரேனும் மேற்படி இறப்பு சான்று வாங்கியுள்ளார்களா என்றால் கந்தசாமியின் மகன் என்ற முறையில் வாங்கிருக்கலாம். கந்தசாமியின் வாரிசு சான்றிதழில் அனைவர்  பெயரும் உள்ளதா என்றால் நான் வாரிசு சான்றிதழை பார்க்கவில்லை அனைவர் பெயரும் இருக்கலாம். 1 முதல் 3 பிரதிவாதிகள் 2011 ம் ஆண்டு  ஒரு பாக பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பாக ஆவணத்தில் கந்தசாமி பெயருக்கு UDR படி பட்டாவாகி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி ஆவணத்தில் பெருமாயி அம்மாள் கிரயம் பெற்ற சொத்தினை அவரது இறப்புக்கு பின்னிட்டு  கந்தசாமியின் வாரிசுகளாகிய நாங்கள் பாகம் பிரித்துகொண்டோம் என குறிப்பிட்டு பாக ஆவணத்தில் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கந்தசாமிக்கு வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் காலம் சென்ற வசந்தி ஆகியோர்கள்தான் வாரிசுகள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்யும்போது கந்தசாமியின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்களை கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் ஆவணத்தில் இணைக்கப்படவில்லை, ஆனால் அதிகாரிகளிடம் காண்பிக்கப்பட்டது. எந்த ஒரு அதிகாரியும்  வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழை ஆவணத்துடன் இணைக்கப்படவேண்டும் என்று தான் சொல்வார்கள் மேற்படி ஆவணங்களை பார்த்துவிட்டு திரும்ப கொடுத்துவிடமாட்டார்கள் என்று சொன்னால் தற்போது தான் அந்த நடைமுறைகள் அமலில் இருந்து வருகிறது, 2011 ம் ஆண்டு இல்லை. மேற்படி வாரிசு சான்றிதழின் படி கந்தசாமியின் 2 வாரிசுகளை விட்டு விட்டு பாகம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கான காரணத்தை 2 ம் பிரதிவாதியிடம் கேட்டபோது உங்களுக்குரிய சொத்துக்களை பெற்றுக்கொண்டதால் கையெழுத்து மட்டும் போடுங்கள் என்று என்னிடம் சொன்னார். மேற்படி பாக ஆவணத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மேற்படி பாக ஆவணத்தில் 2 வாரிசுகளை பாகம் செய்துகொள்ள அழைத்தபோது வர மறுத்துவிட்டதால் மற்ற பாகஸ்தர்கள் பாகம் செய்துகொண்டோம் என ஆவண வாசகங்கள் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.  வாதி மற்றும் வசந்தி ஆகிய இருவரையும் விட்டு விட்டு

1 முதல் 3 பிரதிவாதிகளுடன் நானும் வழக்கறிஞர் என்ற முறையில் ஆலோசனையின் படியும் மேற்படி ஆவணம் தயாரிக்கப்பட்டதென்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள பாகப்பிரிவினை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு அவரது தந்தை கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பாக வாதிக்கு எந்த ஒரு அறிவிப்பும் அளிக்கப்படாமல் சொத்துக்களை பொறுத்து தானசெட்டில்மெண்ட் எனது மனைவி பெயரில் உள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி சொத்தானது எனது மனைவியின் தந்தையான கந்தசாமிக்கு அவரது தாய் வழி சொத்து என்பதால் அது போன்ற அறிவிப்புகள் வழங்கவேண்டிய அவசியம் இல்லை. தாய் வழிசொத்தாக இருந்தாலும், அனைத்து வாரிசுகளுக்கும் சம உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-RW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.